# ஜூன் 11 ஆம் தேதி நகரத்தை திறந்து விடுவதற்கான மாகாண பயணத்தின் முதல் அடியை பாதுகாப்பாக எடுத்து வைக்க ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் தயாராகிறது

ப்ராம்ப்ட்டன், ON (ஜூன் 7, 2021) – இன்று ஒன்ட்டேரியோ அரசாங்கத்தின் அறிவிப்பைத் தொடர்ந்து, வெள்ளிக்கிழமை, ஜூன் 11 வெள்ளிக்கிழமை அதிகாலை 12:01 மணிக்கு நகரத்தை மீண்டும் திறந்து விடுவதற்கான மாகாண பயணத்தின் முதல் அடியை பாதுகாப்பாக எடுத்து வைக்க ப்ராம்ப்ட்டன் நகரம் தயாராகி வருகிறது. இந்த நடவடிக்கை, திட்டமிட்டதற்கு மூன்று நாட்களுக்கு முன்னதாகவே வருகிறது; இதற்காக உள்ளூர் பொது சுகாதார அலகுகள், சுகாதாரப் பங்காளிகள், நகராட்சிகள் ஆகியவற்றுடன் இணைந்து மாகாணத்தின் தடுப்பூசி செலுத்தும் பணியின் மூலம் எங்கள் சமூகத்தின் மீதான நகர நிர்வாகத்தின் தற்போதைய அர்ப்பணிப்புக்காக நன்றி சொல்ல வேண்டும்.

ஜூன் 11 ஆம் தேதியன்று, 12.01 மணிக்கு நகரத்தை மீண்டும் திறந்து விடுவதற்கான மாகாண பயணத்திற்கான முதல் அடியின் கீழாக பின்வரும் விதிமுறைகள் மற்றும் நடவடிக்கைகள் அமலுக்கு வரும்:

- சமூகக் கூட்டங்கள் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட பொது நிகழ்வுகளுக்கான திறந்தவெளியில் கூடும் நபர்களுக்கான எண்ணிக்கையானது, வெவ்வேறு வீட்டு உறுப்பினர்கள் உட்பட,10 என விரிவுபடுத்தப்படும், ;
- திறந்தவெளியில் நடைபெறும் திருமண சேவைகள் மற்றும் இறுதிச் சடங்குகள் உள்ளிட்ட மதச் சேவைகள், சடங்குகள் அல்லது சம்பிரதாயங்களில், இரண்டு மீட்டர் தூரத்தை பராமரிக்கக்கூடிய நபர்களின் எண்ணிக்கையை பேணுவதன் பேரில் நடைபெறலாம்;
- கட்டிடங்களுக்கு உள்ளாக நடைபெறும் திருமண சேவைகள் மற்றும் இறுதிச் சடங்குகள் உள்ளிட்ட மதச் சேவைகள், சடங்குகள் அல்லது சம்பிரதாயங்களில், குறிப்பிட்ட அறையின் 15 சதவீதம் பேர் மட்டுமே அனுமதிக்கப்படவேண்டும்;
- விற்பனைக்கான எந்தப் பொருட்களின் மீதும் எந்த தடையும் இல்லாமல், ஒரு சமயத்தில் 15 சதவீத அளவிலான எண்ணிக்கை கொண்ட நபர்களுக்கு அத்தியாவசியமற்ற பொருட்களுக்கான சில்லறை விற்பனை செய்ய அனுமதிக்கப்படுகிறது;
- அத்தியாவசிய மற்றும் பிற தேர்ந்தெடுக்கப்பட்ட சில்லறை விற்பனை செய்யுமிடங்களில் 25 சதவீதம் பேர் கொண்ட கொள்ளளவுக்கு நபர்கள் அனுமதிக்கப்படுவார்கள், விற்கக்கூடிய எந்தப் பொருட்களுக்கும் எந்த தடையும் இல்லை;
- பெரிய குடும்பங்களுக்கான விதிவிலக்குகளுடன் ஒரு மேஜைக்கு நான்கு பேர் வரை திறந்தவெளியில் உணவு உண்ணும் வசதி அனுமதிக்கப்படும்;
- மூன்று மீட்டர் தூரத்தை பராமரிக்க முடியும் எனும் பட்சத்தில், உடற்பயிற்சி வகுப்புகள், தனிநபர் பயிற்சியில் ஈடுபடுகின்ற திறந்தவெளியில் நடைபெறும் தனிநபர்/குழு விளையாட்டு ஆகியவற்றில் 10 நபர்கள் வரை அனுமதிக்கப்படலாம் ;

- குழந்தைகளுக்கான பகல்நேர முகாம்கள் முதன்மை சுகாதார மருத்துவ அலுவலரின் அலுவலகத்தால் தயாரிக்கப்பட்ட COVID-19 க்கான பாதுகாப்பு வழிகாட்டுதல்களுக்கு இணங்க செயல்பட அனுமதிக்கப்படும் ;
- ஒன்ட்டேரியோ பூங்காக்கள் உள்ளிட்ட முகாம் மைதானங்கள் மற்றும் முகாம் ஸ்தலங்களில் இரவு நேரத்தில் தங்குவது அனுமதிக்கப்படும் மற்றும் குறுகிய கால வாடகைக்கு விடுதல் அனுமதிக்கப்படும்;
- பதிவுசெய்யப்பட்ட அல்லது ஒளிபரப்பப்பட்ட கச்சேரி, கலை நிகழ்வு, நாடக செயல்திறன் ஆகியவற்றின் ஒத்திகை செய்வதற்காக, மற்றும் உள்ளபடியே நிகழ்த்தும் நோக்கத்திற்காக, கச்சேரி அரங்குகள், திரையரங்குகள் மற்றும் திறந்தவெளி திரையரங்குகள் திறக்கப்படலாம்; இதில் 10 க்கும் மேற்பட்ட கலைஞர்கள் இல்லாதிருக்க வேண்டும் மற்றும் பிற கட்டுப்பாடுகளும் இருக்கும்;
- பார்வையாளர்கள் இல்லாமல் செயல்படுவதற்கு, திறந்தவெளி குதிரை பந்தய தடங்கள் மற்றும் மோட்டார் பந்தய சாலைவழிகள் அனுமதிக்கப்படுகின்றன; மற்றும்
- மிருகக்காட்சிசாலைகள், நகரின் அடையாள கட்டிடங்கள், வரலாற்று தலங்கள், தாவரவியல் பூங்காக்கள் ஆகியவற்றை, அவற்றுக்கான பிற கட்டுப்பாடுகள் மற்றும் கொள்திறனில் அனுமதிக்கலாம்.

நகரத்தை மீண்டும் திறந்து விடுவதற்கான மாகாண பயணமானது, மாகாணத்தை எச்சரிக்கையுடன் திறந்து விட்டு, மாகாண அளவிலான தடுப்பூசி செலுத்தப்பட்ட விகிதம் மற்றும் முக்கிய பொது சுகாதார மற்றும் சுகாதார பாதுகாப்பு குறிகாட்டிகளின் மேம்பாடுகளின் அடிப்படையில் பொது சுகாதார நடவடிக்கைகளை படிப்படியாக தளர்த்துவதற்கென வடிவமைக்கப்பட்ட மூன்று படிகள் கொண்ட திட்டமாகும்,

மாகாணத்தின் செய்திக்குறிப்பை இங்கு.படிக்கவும்.

**நகரின் சேவைகள் மற்றும் கட்டிட வசதிகள்**

நகரின் திறந்தவெளி பொழுதுபோக்கு வசதிகள்
அனுமதிக்கப்பட்ட திறந்தவெளி பொழுதுபோக்கு வசதிகளில் கோல்ஃப் மைதானங்கள் மற்றும் ஓட்டுநர் பயிற்சி களங்கள், கால்பந்து மற்றும் பிற விளையாட்டுத் துறைகள், பேஸ்பால் டயமண்டுகள் மற்றும் பேட்டிங் கூண்டுகள், டென்னிஸ் மற்றும் கூடைப்பந்து கூண்டு மைதானங்கள், புல்வெளி பந்துவீச்சு மற்றும் போஸ்(bocce), பிஎம்எக்ஸ் (BMX ) மற்றும் சறுக்கு பூங்காக்கள் மற்றும் நீர்ச்சறுக்கு குளங்கள் மற்றும் ஸ்பிளாஷ் பேட்கள் ஆகியவை அடங்கும்.

புரொஃபெஸ்ஸர்ஸ் லேக் ஏரியின் கரை மற்றும் எல்டோராடோ பூங்கா வெளிப்புறக் குளம் ஆகியவை இந்தப் பருவத்தில் திறப்பது பற்றிய விவரங்கள் இந்த மாத இறுதியில் கிடைக்கும்.

நகரின் குறிப்பிட்ட சில வசதிகளுக்கான COVID-19 சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு அளவுருக்கள் தொடர்பான கால அட்டவணை மற்றும் விவரங்களுக்கு, தயவுசெய்து www.brampton.ca/summerfun. ஐப் பார்வையிடவும்

ஸ்ப்ளாஷ் பேட்கள் மற்றும் நீர்ச்சறுக்கு குளங்கள் (Splash Pads and Wading Pools)

ஸ்பிளாஷ் பேட்கள் நகரம் முழுவதும் திறந்திருக்கும். சிங்க்வாகவ்ஸி பூங்காவில் உள்ள நீர்ச்சறுக்கு குளம் 2021 ஆம் ஆண்டு ஜூன் 11 ஆம் தேதி வானிலை அனுமதிக்கும் பட்சத்தில் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக மீண்டும் திறக்க திட்டமிடப்பட்டுள்ளது. நகரெங்கும் நீர்ச்சறுக்கு குளங்கள் ஜூன் 12 தொடங்கி, வார இறுதி நாட்களிலும், ஜூன் 26 இல் துவங்கி எல்லா நாட்களிலும் திறந்திருக்கும். உடல் ரீதியான தூரம் பராமரிப்பது அவசியம்; மற்றும் கலந்துகொள்வதற்கு முன்பாக COVID-19 அறிகுறிகளுக்கு குடியிருப்பாளர்கள் சுய மதிப்பீடு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். ஸ்பிளாஷ் பேட் மற்றும் நீர்ச்சறுக்கு குளங்களின் இருப்பிடங்கள் மற்றும் செயல்படும் நேரங்களின் பட்டியல் இங்கே கிடைக்கிறது.

மக்கள் நேரில் கலந்துகொள்ளும் கோடைக்கால முகாம்கள்

ப்ராம்ப்ட்டன் நகரின் ஒன்பது பொழுதுபோக்கு மையங்கள் ஜூலை 5 முதல் குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்கான தனிப்பட்ட கோடைக்கால முகாம்களை வழங்கும். முகாம்களில் சேருவதற்கான பதிவு ஜூன் 7 ஆம் தேதி ஆரம்பிக்கப்பட்டது. முகாம்களில் ஆட்டம் பாட்டம், விளையாட்டு, கைவினை மற்றும் பல நடவடிக்கைகள் இருக்கும், திங்கள் முதல் வெள்ளி வரை காலை 8:45 மணி முதல் மாலை 5:15 மணி வரை செயல்படும். ஆகஸ்ட் 2 இல் துவங்கும் வாரமானது பொது விடுமுறை காரணமாக குறுகிய வாரமாக இயங்கும்.

பீல் பொது சுகாதார அமைப்பின் வழிகாட்டுதலுடன் பங்கேற்பாளர்கள் மற்றும் ஊழியர்களின் உடல்நலம் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக மேம்படுத்திய நெறிமுறைகளை ப்ராம்ப்ட்டன் நகரம் செயல்படுத்துகிறது. பங்கேற்பாளர்கள் எல்லா நேரங்களிலும் முக கவசங்களை கட்டிடங்களுக்குள் அணிய வேண்டும், மற்றும் உடல் ரீதியான தூரம் சாத்தியமில்லாதபோது திறந்தவெளியிலும் அணிய வேண்டும். முகாமில் பங்கேற்பவர்கள் ஒருவருக்கொருவர் தொடர்பு கொள்ளாத கூட்டுத் தொகுப்பாக பிரிக்கப்படுவார்கள். மேம்படுத்தப்பட்ட துப்புரவு நடைமுறைகள், தினசரி உடல்நிலை தகுதிகாணல் மற்றும் பலவும் அமலில் இருக்கும். மக்கள் நேரில் கலந்துகொள்ளும் கோடைக்கால முகாம்கள் பற்றிய முழு விபரங்களுக்கு இங்கு க்ளிக் செய்யவும்.

கட்டணங்கள் மாறுபடும். Call 3-1-1 ஐ அழைக்கவும் அல்லது பதிவு செய்ய வருகை தரவும்: www.brampton.ca/reccamps .

**தடுப்பூசி செலுத்துதல்**

12 மற்றும் அதற்கு மேலான வயது கொண்ட ப்ராம்ப்ட்டன் உள்ளிட்ட பீல் பிராந்தியத்தில் வசிக்கின்ற, வேலை செய்கின்ற அல்லது பள்ளி செல்கின்ற அனைத்து தனி நபர்களும் கோவிட்-19 தடுப்பூசி செலுத்திக்கொள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட மருத்துவகங்களில் இப்போது முன்பதிவு செய்துகொள்ளலாம். 12 முதல் 15 வயதுடையோர் தங்களுக்கான முன்பதிவுகளை பீல் பிராந்திய முன்பதிவு கட்டமைப்பை உபயோகித்து ஆன்லைனில் முன்பதிவு செய்ய வேண்டும் முன்பதிவு செய்வதில் யாருக்கேனும் உதவி வேண்டுமானால், பீல் பிராந்திய கோவிட்-19 தடுப்பூசி தொலைபெசி எண்ணாகிய 905.791.5202 இல் காலை 8 மணி முதல் மாலை 8 மணி வரை வாரத்தின் 7 நாட்களிலும் தொடர்பு கொள்ளலாம்.

ஏப்ரல் 18 அல்லது அதற்கு முன்னர் ஃபைசர் அல்லது மாடர்னா தடுப்பூசி செலுத்திக்கொண்ட 70 வயதுக்கு மேற்பட்ட பீல் பிராந்தியக் குடியிருப்பாளர்களுக்கு இரண்டாவது டோஸ்-க்கான முன்பதிவு இப்போது செய்யப்படுகிறது. covid-19.ontario.ca/book-vaccine/ இல் உள்ள மாகாண முன்பதிவு கட்டமைப்பை பயன்படுத்தியோ அல்லது மாகாண முன்பதிவு செய்தலுக்கான எண்ணாகிய 1-833-943-3900 ஐ அழைப்பதன் மூலமோ முன்பதிவுகள் செய்யப்படலாம்.

கோவிட்-19 தடுப்பூசிகள் பற்றிய மிக மிக சமீபத்திய தகவல்களுக்கு பிராந்தியத்தின் தடுப்பூசி முனையத்திற்கு வருகை புரியவும்

**லின்குகள்**

- ப்ராம்ப்ட்டன் நகர கோவிட்-19 நிகழ்ச்சித் திட்டமிடல் மற்றும் சேவை பற்றிய புது தகவல்கள்
- ப்ராம்ப்ட்டன் நகரம் – எவை திறந்துள்ளன, எவை மூடியுள்ளன
- ஒன்ட்டேரியோ அரசாங்கத்தின் தடுப்பூசி முனையம்
- பீல் பிராந்திய தடுப்பூசி முனையம்
- கோவிட்-19 அறிகுறிகள்
- கோவிட்-19 தடுப்பூசி
- ப்ராம்ப்ட்டனில் சோதனை செய்துகொள்ளுதல்
- சுயமாகத் தனிமைப்படுத்திக் கொள்வது எப்படி
- கோவிட்-19 தொற்று பரவல் காலத்தில் வணிக மற்றும் பணி இடங்களை பாதுகாப்பாக வைத்தல்
- பீல் பகுதியில் கோவிட்-19 நோயாளிகள்

-30-

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் பரிமாற்றம்
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca